[2018 ஜூன் 28

232—

தரம் உயர்த்துதல்

***5566—திரு. எஸ். பவுன்ராஜ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், கிடாரண்கொண்டான் ஊராட்சியிலுள்ள 33/11 KVA துணை மின் நிலையத்தை 110 KVA துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனது தொகுதியில், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், கிடாரண்கொண்டான் ஊராட்சியில் இயங்கி வருகின்ற 33/11 KVA துணை மின் நிலையத்தை, 110/11 KVA திறன் கொண்ட துணை மின் நிலையமாக தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கோரியிருக்கின்றார். அந்தப் பணி நடைபெறுவதற்குண்டான ஆணைகள் இப்போது பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிதியாண்டுக்குள் அதாவது, மார்ச் 2019—க்குள் அந்தப் பணி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

முற்பகல் 10—10

திரு. எஸ். பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றையதினம், என்னுடைய பூம்புகார் தொகுதியில் உள்ள தரங்கம்பாடியில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குப் புதிய கட்டடமும், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குக் குடியிருப்புக் கட்டுவதற்கு 3 கோடியே 63 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, இந்த மாமன்றத்தில் அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அன்பிற்கினிய அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூன் 28]

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு என்ற இடத்தில் ரூபாய் 3 கோடியே 63 இலட்சத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடமும், துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குக் குடியிருப்புகளும் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நாகப்பட்டினம் மக்கள் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூம்புகார் தொகுதி, கிடாரண்கொண்டான் ஊராட்சியில் உள்ள துணை மின் நிலையம் தரம் உயர்த்திக் கொடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் உள்ள செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் அதிக அளவில் பொதுமக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் வாழ்ந்து வருகின்றனர். அது ஏறக்குறைய 26 ஊராட்சிகளை உள்ளடக்கிய பகுதியாகும். அதேபோல, அந்த ஊராட்சி ஒன்றியமும் அந்தத் துணை மின் நிலையம் உள்ள பகுதியிலேதான் இருக்கிறது. குறைந்த மின்னழுத்தம் வருகின்ற காரணத்தினால், அங்கே அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தமிழ்நாட்டை மின் மிகை மாநிலமாக உருவாக்கியிருக்கிற இந்த நேரத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னொரு கேள்வி இருக்கிறது. உரையை முடியுங்கள்.

திரு. எஸ். பவுன்ராஜ்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்தி, அந்தப் பணியை விரைந்து முடித்துக் கொடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொண்டு, நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதியில், மார்ச் 2019–க்குள் அதற்கான பணிகள் முடிக்கப்பட்டு, இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும். மாண்புமிகு முதல்வர் அவர்கள், எங்கெங்கெல்லாம் இதுபோன்று மின்னழுத்தம் குறைவாக இருக்கின்றதோ, அந்தப் பகுதிகளையெல்லாம் கண்டறிந்து, உடனடியாக, முன்னுரிமை அடிப்படையில், அந்தப் பணிகளையெல்லாம் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். அதனடிப்படையிலேதான் அதற்கான பணிகளை மின் வாரியம் மேற்கொண்டிருக்கிறது. மேலும், அந்த துணை மின் நிலையத்தை 110 KVA திறன் கொண்டதாக தரமுயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர்

அவர்களின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுகின்ற வகையில், அதற்கான பணிகள் இன்னும் 6, 7 மாத காலங்களில் முடிந்துவிடும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 'தட்கல்' திட்டத்தின் மூலமாக மின்னிணைப்பு வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. உடுமலைப்பேட்டை பகுதியில் உள்ள மொடக்குப்பட்டி பாபு, ரவிச்சந்திரன் உள்ளிட்ட 8 பேருக்கு இன்னும் மின்னிணைப்பு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. காரணம் கேட்டால், 100* K.V.A. transformer *பற்றாக்குறை என்று தெரிவிக்கின்றார்கள். அதை உடனடியாக, இந்த நிதியாண்டு தொடங்குவதற்கு முன்பாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற அந்த 8 பேரும் 6–9–2017–க்குள் பணம் கட்டியிருந்தார்கள் என்றால், இந்த ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்படும். ஏற்கெனவே, கடந்த ஆண்டு 10 ஆயிரம் பேருக்கு தட்கல் முறையில் மின்னிணைப்பு வழங்கப்படும் என்று சொன்னோம். அந்த 10 ஆயிரம் பேருக்கும் முழுமையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற நபர்கள் 6–9–2017–க்குப் பின்னர் பணம் கட்டியிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.* Transformer *இல்லாத காரணத்தால் அதை அமைக்கும் பணி தாமதமாகிக் கொண்டிருக்கிறது என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இதுகுறித்து நான் பல முறை சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். உயர் நீதிமன்றத்தில் தடையாணை இருந்ததால் இரண்டு ஆண்டுகளாக* transformer *வாங்க முடியாத சூழ்நிலை இருந்தது. இப்போதுதான் தடையாணை நீக்கப்பட்டு,* tender *கோரப்பட்டிருக்கின்றது. இன்னும் ஒரு மாதம் அல்லது இரண்டு மாத காலத்திற்குள்,* transformer *பற்றாக்குறை என்கிற பிரச்சினை முடிந்துவிடும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற நபர்கள் 6–9–2017–க்கு முன்பாகப் பணம் கட்டியிருந்தார்கள் என்று சொன்னால், இந்த ஆண்டு 10 ஆயிரம் பேருக்குக் கொடுக்கும்போது, அவர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு*

2018 ஜூன் 28]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 233, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

233—

மேம்பாலம்

***14033—திரு. க. கார்த்திகேயன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *ரிஷிவந்தியம் தொகுதி, சங்கராபுரம் ஒன்றியம், வடபொன்பரப்பி–அருளம்பாடி இடையில் முஸ்குந்தா நதியின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *விழுப்புரம் மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, சங்கராபுரம் ஒன்றியம், வடபொன்பரப்பி–அருளம்பாடி இடையில் முஸ்குந்தா நதியின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்றார்கள். இதுகுறித்து, விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றதன் அடிப்படையில், 2017–2018 ஆம் ஆண்டுக்கான பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II-ன்கீழ் ரூ.196.60 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாலம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டு, அதை அமைக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.*